# சுபீட்சம்

நிகழ்நிலை பத்திரிகை; அனைத்து விடயங்களும் மக்களுக்காகவே

SUPEEDSAM EVERYTHING FOR PEOPLE

புதன்கிழமை 07.07.2021 supeedsam.com supeedsam@gmail.com





# காணாமல் போனவர்கள் குறித்த உண்மையான எண்ணிக்கை அரசாங்கத்திடம் இருக்கிறது

## பொய்யான விபரங்களை வெளியிடவேண்டாம்; நீதியமைச்சர் கோரிக்கை

(ராஜ்)



இலங்கையில் காணாமல் போனவர்கள் தொடர்பில் பலர் பொய்யான புள்ளிவிபரங்களை வெளியிட்டு நாட்டின் நற்பெயருக்கு களங்கத்தை ஏற்படுத்த முனைவதாக நீதியமைச்சர் அலி சப்ரி தெரிவித்துள்ளார்.

2009ஆம் ஆண்டு இறுதி யுத்தம் வரை, காணாமல் போனவர்கள் குறித்த உண்மையான எண்ணிக்கையுடனான புள்ளிவிபரங்கள்

02 ஆம் பக்கத்தில்...

# முஸ்லிம்களின் காணியை தமிழர் காணியென கூறி இனக்கலவரத்திற்கு வித்திடும் அரசியல்வாதிகள்

## கிராம நிலதாரி விளக்கம்

(நூருல் ஹுதா உமர்)



இனக்கலவரத்தை உண்டாக்கி அரசியல் ஆதாயம் தேட முனைபவர்களின் நாடகமே இந்த காணி அபகரிப்பு விடயம். ஆங்கிலேயர் காலத்தின் வரைபடம் முதல் எனது (தனிநபர்) காணி தான் என்பதை நிரூபிக்கும் உறுதிகள் வரை சர்ச்சைக்குள்ளாகியுள்ள

02 ஆம் பக்கத்தில்...

# நாட்டின் இறைமை,நீதித்துறை கேள்விக்குள்ளாக்கப்பட்டுள்ளது

(துறையூர் சஞ்சயன்)



இலங்கை நாட்டில் நிறைவேற்றதிகார ஜனாதிபதி முறைமை சர்வாதிகாரப் போக்கிற்கு வித்திடுகிறது என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அம்பாறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் த. கலையரசன் தெரிவித்தார்.

அவர் இவ்விடயம் தொடர்பாக மேலும் தெரிவிக்கையில்,

02 ஆம் பக்கத்தில்...

# மட்டு.மாவட்டத்திற்கு 50,000 தடுப்பூசிகள்: இரண்டாம் கட்ட பணிகள் ஆரம்பம்

(ரீ.எல்.ஜவ்பர்கான்)



இரண்டாம் கட்ட கொரோனா தடுப்பூசி ஏற்றும் நடவடிக்கைகள் மட்டக்களப்பு மாவட்டத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை ஆரம்பமாகின. இதற்கென 50000 தடுப்பூசிகள் வழங்கப்பட்டுள்ளதாக சுகாதார தரப்பினர் தெரிவித்தனர்.

02 ஆம் பக்கத்தில்...

# நாட்டை திறக்காவிட்டால் பொருளாதாரம் பாதிப்படையும் அபாயம்

## கிழக்கு ஆளுநர் அனுராதா ஜகம்பத்

(எஸ்.எஸ்.அமிர்தகழியான்)



ஒன்றரை வருடத்துக்கு மேலாக கொரோனா தாக்கத்தால் நாம் பாதிக்கப்பட்டுள்ளோம், இதன் காரணமாக எமது பொருளாதாரத்தை வீழ்ச்சி அடையவைக்க முடியாது.

02 ஆம் பக்கத்தில்...




# எனது மகனின் மரணத்துக்கு நீதி வேண்டும்

## மெய்பாதுகாவலரால் சுட்டு கொலை செய்யப்பட்ட பாலசுந்தரத்தின் தாயார் கதறல்

(குமணன்)

இராஜாங்க அமைச்சர் எஸ். வியாழேந்திரன் வீட்டின் முன்னால் அவரது மெய்பாதுகாவலாரால் படுகொலை செய்யப்பட்ட மகாலிங்கம் பாலசுந்தரத்தின் ஆகிய எனது மகனின் படுகொலைக்கு நீதிவேண்டும் என அவரின்தாயார்

02 ஆம் பக்கத்தில்...

# பிரசாந்தனுக்கு பிணை

(சுபீட்சம் நிருபர்)



தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் பொதுச் செயலாளர் பூபாலப்பிள்ளை பிரசாந்தனுக்கு கொழும்பு மேன்முறையீட்டு நீதிமன்றம் நேற்று பிணை வழங்கியுள்ளது.

07 ஆம் பக்கத்தில்...

# நாளை பதவியேற்கிறார் பஸில்

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன தேசிய பட்டியல் பாராளுமன்ற உறுப்பினராக பசில் ராஜபக்ஷவை உள்வாங்கிக்கொள்வதற்கான விபரங்களை தேர்தல் ஆணைக்குழுவுக்கு வழங்கியதாக கட்சியின் பொதுச் செயலாளர் தெரிவித்துள்ளார்.

ஜயந்த கெட்டகொட பாராளுமன்ற உறுப்பினர் பதவியை

02 ஆம் பக்கத்தில்...




# திருகோணமலை தாதி உத்தியோகத்தர் ஒருவர் தனக்குத் தானே தீ மூட்டி தற்கொலை செய்ய முயற்சி

(எப்.முபாரக்)

திருகோணமலை சேருநுவர பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் தாதி உத்தியோகத்தர் ஒருவர் தனக்குத் தானே தீ மூட்டி தற்கொலை செய்ய முயற்சித்த சம்பவமொன்று இடம்பெற்றுள்ளது.

07 ஆம் பக்கத்தில்...




# வெள்ளைவான் இப்பொழுது செல்வதில்லை ஆனால் நேரடியாக சென்று இழுத்து செல்லப்படுகிறார்கள்

(காந்தன்)

வெள்ளைவான் கடத்தல் சம்பவங்கள் இப்போது இடம்பெறுவதில்லை என்பது உண்மையே, ஆனால் இப்போது வீடுகளுக்கு நேரடியாகவே சென்று

02 ஆம் பக்கத்தில்...







# அமெரிக்க காங்கிரஸின் தீர்மானத்தை சாதாரண விடயமாக எடுத்துவிடக் கூடாது

(காந்தன்)



வடக்கு, கிழக்கை தமிழர்களின் பூர்வீக பூமியாக அங்கீகரிக்க வேண்டும் என்ற அமெரிக்க

02 ஆம் பக்கத்தில்...

## மட்டு.மாவட்டத்திற்கு 50,000 தடுப்பூசிகள்

நேற்று மட்டக்களப்பு போதனா வைத்தியசாலை கல்லடி சுவாமி விபுலானந்தா அழகியற் கற்கைகள் நிறுவகம் உட்பட பல பிரதேச செயலகப்பிரிவுகளிலும் தடுப்பூசிகள் ஏற்றப்பட்டன.

சினபோர்ம் ரக தடுப்பூசிகளே இன்று ஏற்றப்பட்டன.

பொதுச் சுகாதார பரிசோதகர்கள் மருத்துவமாதுக்கள் பணி பகிஷ்கரிப்பில் ஈடுபட்டுள்ள போதிலும் இராணுவத்தினரின் உதவியுடன் தடுப்பூசி ஏற்றும் நடவடிக்கைகள் தங்கு தடையின்றி இடம் பெற்றமை குறிப்பிடத்தக்கது.

## நாளை பதவியேற்கிறார் பஸில்

இராஜினாமா செய்ததில் ஏற்பட்ட வெற்றிடத்துக்கு பசில் ராஜபக்ஷவின் பெயர் பரிந்துரைக்கப்பட்டுள்ளது. பசில் ராஜபக்ஷ நாளை வியாழக்கிழமை பாராளுமன்ற உறுப்பினராக பதவியேற்பார் என்று கட்சியின் பொதுச் செயலாளர் சாகர காரியவசம் தெரிவித்துள்ளார்.

பசில் ராஜபக்ஷவுக்கு பலமான அமைச்சுப் பதவியொன்று வழங்கப்பட உள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

நாட்டின் பொருளாதார முன்னேற்றத்தில் பசில் ராஜபக்ஷ கவனம் செலுத்தவுள்ளதாகவும், நாளை மறுநாள் பதவியேற்பார் என்றும் பாராளுமன்ற உறுப்பினர் சாகர காரியவசம் தெரிவித்துள்ளார்.

## எனது மகனின் மரணத்துக்கு நீதி வேண்டும்

கோரிக்கை விடுத்துள்ளளார்.

கடந்த மாதம் 21 ம் திகதி இராஜாங்க அமைச்சர் எஸ். வியாழேந்திரனின் மெய்பாதுகாவலர் பொதுமகன் மீது துப்பாக்கி சூடு நடாத்தியதில் 34 வயதுடைய மகாலிங்கம் பாலசுந்தரம் என்பவரே உயிரிழந்த சம்பவம் தொடர்பாக மெய்பாதுகாவலர் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டார்.

இந்த நிலையில் நேற்று செவ்வாய்க்கிழமை மட்டக்களப்பு நீதவான் நீதிமன்றத்தில் நீதவான் ஏ.சி.எம். றிஸ்வான் முன்னிலையில் வழக்கு விசரணைக்கு எடுக்கப்பட்டது இதன்போது குறித்த மெய்பாதுகாவலருக்கு கொரோனா தொற்று காரணமாக நீதிமன்றத்திற்கு அழைத்து வரமுடியாத நிலையில் இந்த வழக்கு விசாரணை இடம்பெற்றது இதன்போது குறித்த சந்தேகநபரான மெய்பாதுகாவலரை எதிர்வரும் 9 ம் திகதி வெள்ளிக்கிழமை வரை தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டார்.

இந்த வழக்கு விசாரணைக்கு நீதிமன்றத்திற்கு ஆஜரான உயிரிழந்தவரின் தாயார் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில் இவ்வாறு தெரிவித்தார். அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்

எனது மகனுக்கு என்ன நடந்தது என்னத்தினால் பிரச்சனை வந்தது என்றதுடன் எனது பிள்ளைக்கு நீதிகிடைக்கவேண்டும் அதுமட்டும் தான் தேவை என்றார்.










## வெள்ளைவான் இப்பொழுது செல்வதில்லை ஆனால் நேரடியாக

அடித்து ,இழுத்து தூக்கிச் செல்லும் சம்பவங்களே இடம்பெறுகின்றது என முன்னாள் நீதி அமைச்சரும் ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினருமான தலதா அத்துகோரல தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

ஹரின் பெர்னாண்டோ பாராளுமன்றத்தில் உரையாற்றியமை தொடர்பில், பிரபாகரனை சுட்டுக்கொன்று இழுத்துவந்தது நினைவில் உள்ளதா ஜனாதிபதி கேட்டிருந்தார் என்று குறிப்பிட்டுள்ள தலதா அதுகோரல, தற்போது அதே போன்று மேல்மாகாண பிரதி பொலிஸ்மா அதிபரும் பிரபாகரனுக்கு நடந்ததுபோல் தான் நடக்குமென ஊடகவியலாளர் ஒருவரை பகிரங்கமாக மிரட்டியுள்ளார் என்று சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்நிலையில் வெள்ளை வான் பற்றி பேசுகின்றனர். ஆனால் வெள்ளை வான் அச்சுறுத்தல் இல்லை என்பது உண்மையே ஆனால் வீடுபுகுந்து இழுத்துச் செல்வதையே இப்போது செய்கின்றனர் என்றும் தலதா அதுகோரல இதன்போது குறிப்பிட்டுள்ளார்.

இவர்களின் கடந்த ஆட்சியில் கொலை மிரட்டல்களினால் பல ஊடகவியலாளர்கள் நாட்டை விட்டு வெளியேறினர். அவ்வாறான தொரு நிலைமை மீண்டும் ஏற்பட்டு விடுமோ என்ற அச்சம் ஏற்படுகின்றது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

## அமெரிக்க காங்கிரஸின் தீர்மானத்தை சாதாரண விடயமாக

காங்கிரஸில் தீர்மானத்தை அரசாங்கம் சாதாரண விடயமாக எடுத்துவிடக் கூடாது என நாடாளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்தார்.

இஸ்ரேல் எனும் நாடு எவ்வாறு உருவான விதத்தை நிணைவில் கொண்டு இந்த விடயத்தில் அரசாங்கம் செயற்பட வேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டார். நாடாளுமன்றில் இடம்பெற்ற சபை ஒத்திவைப்பு வேளை விவாதத்தின்போதே ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன் கிரியெல்ல இவ்வாறு கூறினார்.

மேலும் 20 ஆவது திருத்தச்சட்டத்தின் ஊடாக அனைத்து அதிகாரத்தையும் ஜனாதிபதியிடம் வழங்கிவிட்டு, நீதிமன்றம் உள்ளிட்டவற்றின் சுயாதீனம் குறித்து இங்கு விவாதித்து எந்தவொரு பலனும் கிடையாது என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

19 ஆவது திருத்தச்சட்டத்தின் இல்லாது செய்தமையால் இன்று சர்வதேசத்தின் பகையை சம்பாதித்துள்ளதாகவும் லக்ஷ்மன் கிரியெல்ல குறிப்பிட்டார்.

## நாட்டின் இறைமை,நீதித்துறை கேள்விக்குள்ளாக்கப்பட்டுள்ளது

நாட்டில் ஏற்படுத்தப்பட்ட 19 ஆவது திருத்தச்சட்டத்தில் நீதி மாத்திரமல்ல சகல நிர்வாகத் துறையும் ஆணைக்குழுவாக அமைக்கப்பட்டு அதன் அடிப்படையிலேயே செயற்பட்டது. அந்தச் செயற்பாடு நாட்டில் ஜனநாயகத்தை நிலை நிறுத்தியிருந்தது.

தேவைக்கேற்ப சட்ட நீதித்துறை உட்பட பல விடயங்களை இல்லாமல் செய்வதற்காகவே இருபதாம் திருத்தச் சட்டம் கொண்டு வரப்பட்டுள்ளது என்பதை 20 ஆம் திருத்தத்திற்கு ஆதரவாக வாக்களித்தவர்கள் இன்று உணர்ந்திருக்க முடியும். 20 ஆம் திருத்தச் சட்டம் கொண்டு வந்ததன் பிற்பாடு நாட்டில் இருக்கின்ற சகல அதிகாரங்களையும் கையாளக்கூடிய ஒருவராக நாட்டின் ஜனாதிபதி ஆக்கப்பட்டிருக்கிறார்.

அந்த அடிப்படையில் நீதித் துறையோ கல்வித் துறையோ ஏனைய துறைகள் அனைத்திலும் ஒரு நிறைவேற்றதிகாரம் பயன்படுத்தப்படுகிற பொழுது தனி ஒருவருடைய அதிகாரங்கள் திணிக்கப்படுகிறது. அவ்வாறு திணிக்கப்படுகிறபோது நீதி நியாயத் துறை கேள்விக்குட்படுத்தப்படுகிறது.

அவ்வாறான அதிகாரங்கள் பயன்படுத்தப்படுவதனால் நீதித்துறை சுயாதீனமாக இயங்க முடியாத நிலை காணப்படும். அந்த சுயாதீன நிலை, அண்மையில் ஜனாதிபதி பொது மன்னிப்பு அடிப்படையில் விடுதலையான முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் துமிந்த சில்வாவின் மூலம் தற்போது கேள்விக்குள்ளாக்கப்பட்டுள்ளது. உண்மையில் மரண தண்டனைக் கைதியின் விடுதலையில் சட்ட வரைமுறையும் வரையறையும் பேணப்படாமலிருப்பதனால் இதனை ஏற்றுக்கொள்ள முடியாது. குறிப்பாக நீதித்துறை விடயத்தில், நாட்டின் இறைமை கேள்விக்குள்ளாக்கப்பட்டுள்ளது.

துமிந்த சில்வாவின் விடுதலை நீதித்துறையை கேள்விக்குட்படுத்துகின்ற ஒரு செயற்பாடாக இருக்கின்றது. இந்த நாட்டில் நீதித்துறையுடன் தொடர்பானவர்கள் பல விடயங்களை கேள்வியாக எழுப்பியிருக்கிறார்கள்.

சுயாதீனத்தன்மை அற்ற நீதித்துறை இருக்கிறதென்பதை நாட்டிலுள்ள சகல சட்டத்தரணிகளும் கேள்வியாக தொடுத்திருக்கிறார்கள். உண்மையில் அதனை நியாயபூர்வ கேள்வியாகப் பார்க்கின்றோம். இந்த நாட்டின் நிலைமை தொடராக இவ்வாறுதான் இருக்கிறது.

எனவே, இந்த அடிப்படையில் கூட்டமைப்பு நல்லாட்சி அரசில் தமிழர்களுக்காக மாத்திரமல்ல நாட்டில் வாழ்கின்ற ஒவ்வொரு பிரஜைகளுக்குமாக ஜனநாயகப் பண்புகள் கொண்ட 19 ஆவது திருத்தச்சட்டத்திற்கு ஆதரவு வழங்கி நடைமுறையில் பயன்படுத்தியிருந்தது. ஆனால், 19 ஆம் திருத்தச் சட்டத்தை இல்லாமல் செய்து, நாட்டின் ஜனநாயக சுயாதீனத்தை இல்லாமல் செய்வதற்குரிய வழியாக 20 ஆவது திருத்தச்சட்டம் அமைந்துள்ளது. ஆகவே, ஜனநாயகமற்ற அதிகார துஷ்பிரயோகத்தை ஏற்படுத்துவதற்காகவே 20 ஆவது திருத்தச் சட்டத்தை கொண்டு வந்திருக்கிறார்கள். அதன் விளைவுகளே பொதுமக்கள் மத்தியில் இன்று தாக்கம் செலுத்துகிறது என்றார்.

## நாட்டை திறக்காவிட்டால் பொருளாதாரம் பாதிப்படையும் அபாயம்

பொருளாதாரம் பாதிக்கும் ஆனால் முதலாவது பாதிக்கப்படுவது

பொதுமக்கள் ஆகவே மக்களை பாதிக்க விட முடியாதென கிழக்கு மாகாண ஆளுநர் அனுராதா ஜகம்பத் தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் இதன்போது மேலும் தெரிவிக்கையில், மிக விரைவில் நாட்டை திறக்க வேண்டும் திறந்தால்தான் மக்களுடைய வாழ்வாதாரமும் பொருளாதாரமும் உயர்வடையும்.

அரசாங்கம் சில இடங்களை தனிமைப் படுத்தினால் மக்கள் ஒத்துழைப்பு வழங்குவதுடன் அவர்கள் தெளிவடைய வேண்டும், தொற்று அதிகரிக்க நாங்கள் தான் பொறுப்பாளி என்பதை சுகாதார நடைமுறையைப் போனாமல் வீதியோரங்களில் சுற்றி அலைந்தால் கொரோனா தொற்று விகுதத்தை நிறுத்த முடியாது.

ஆகவே மக்களும் தங்களுடைய பொருளாதாரத்தை வளர்ப்பதற்கு முயற்சி எடுக்க வேண்டும் முயற்சி எடுக்காத பட்சத்தில் நாங்கள் இந்த வீழ்ச்சியில் இருந்து மீள முடியாத ஒரு நிலை உருவாகத் தான் வாய்ப்புள்ளது என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## முஸ்லிம்களின் காணியை தமிழர் காணியென கூறி இனக்கலவரத்திற்கு

காணி விடயத்தில் உள்ளது என சுலைமா லெப்பை ஹமீட் தெரிவித்தார்.

கடந்த வெள்ளிக்கிழமை கல்முனை உப பிரதேச செயலக கிராம நிலைதாரியை தாக்கியதாக கண்டன ஆர்ப்பாட்டங்களும், வழக்கு தாக்குதல்களும், ஊடக செய்திகளுமாக இருக்கும் கல்முனை இஸ்லாமாபாத் காணிவிடயம் தொடர்பில் விளக்கமளிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு பேசும் போதே சர்ச்சைக்குள்ளாகியுள்ள காணி உரிமையாளரான சுலைமா லெப்பை ஹமீட் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு தொடர்ந்து கருத்து தெரிவித்த அவர், குறித்த நபருக்கும் எனக்கும் இடையில் சம்பாஷனை நடந்து கொண்டிருந்த போது வீதியால் சென்றவர் அவரை தாக்கியதாக பொய்யான குற்றசாட்டை முன்வைத்து கல்முனை பொலிஸில் முறைப்பாடு செய்து வலது குறைந்த அந்த சகோதரரை 24 மணித்தியாலயங்களுக்கு மேலாக கம்பி கூட்டுக்குள் வைத்துள்ளார்கள். இது அநியாயமான ஒன்றாகும். தகவலறியும் சட்டம் முதல் இலங்கை அரசின் சகல வழிகளிலும் என்னுடைய காணிதான் அந்த காணி என்பதற்கான சகல ஆதாரங்களையும் வைத்துள்ளேன். சமூக செயற்பாடுகளில் முன்நிற்கும் என்னுடைய ஆளுமையை கேள்விக் குட்படுத்தி என்னை முடக்கும் விதமாகவே இந்த போலியான குற்றசாட்டு முன்வைக்கப் பட்டுள்ளது என்றார்.

இங்கு ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த குறித்த காணி அமைந்திருக்கும் கல்முனை 01 க்கு பொறுப்பான கிராம சேவக பிரிவின் அதிகாரி டீ .ஆர். அலாவுதீன், வாடிவீட்டு வீதி, வயல், கடல், கல்முனை நகர் போன்றவற்றை எல்லைகளாக கொண்டுள்ள இஸ்லாமாபாத், கல்முனை நகர் போன்ற பிரிவுகளுக்கு கிராம நிலதாரியாக இருக்கும் எனக்கு எனது பிரிவை பற்றி நன்றாக தெரியும். 1989 காலப்பகுதிக்கு முன்னர் ஒன்றாக இருந்த கல்முனை பிரதேச செயலகம் பின்னாட்களில் சில நபர்களினால் மற்றுமொரு உப அலுவலகம் உருவாக்கப் பட்டதில் இருந்து பிரச்சினைகள் நீண்டு கொண்டே இருக்கிறது.

காலத்திற்கு காலம் வேறு பெயர்களை கொண்டு அழைத்தாலும், சரியான எல்லைகளோ அல்லது நிர்வாக முறைகளோ இல்லாத கல்முனை உப பிரதேச செயலகத்தின் நிர்வாகத்தின் கீழுள்ள கல்முனை 1சீ கிராம சேவகர் முறைகேடாக அதிகாரத்தை பயன்படுத்தியுள்ளார். சம்பவம் தொடர்பில் கல்முனை பொலிஸில் நடவடிக்கைக்காக முறைப்பாடு செய்துள்ளேன். இது முதல் தடவையல்ல கடந்த காலங்களிலும் வாடி வீட்டு வீதியில் உள்ள தனிநபர் 13 பேருக்கு சொந்தமான காணிகளில் மாகாண காணி ஆணையாளரின் அனுமதியில்லாமல் அரச காணி அறிவித்தலை காட்சிப்படுத்தினார்கள். அந்த வழக்கும் இப்போது வரை விசாரணைக்காக நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது. எனது பிரதேச முஸ்லிங்களின் பிரச்சினைகளை தீர்க்க வேண்டியவர் நானே. வேறு பிரிவு கிராம சேவகர் அல்ல.

குறித்த காணி தொடர்பில் அரசாங்க அதிபருக்கு அறிவித்துள்ளோம். தனியார் காணி என்பதற்கான ஆதாரங்கள் இருக்கிறது. ஆனால் அரச காணி என்பதற்கான ஆதாரம் இருக்கிறதா? அரசியல் ஆதாயம் தேட அரசியல்வாதிகள் போடும் நாடகங்களே இவை. எங்கள் பிரதேச சகோதர்கள் இஸ்லாமிய வழியில் பொறுமையாக இருந்து இனக்கலவரமொன்றை தடுத்துள்ளார்கள் என்றார்.

இங்கு கருத்து தெரிவித்த இஸ்லாமாபாத் முக்கியஸ்தரான எஸ்.எம். அபூபக்கர் கல்முனை மாநகர சபை உறுப்பினரான சந்திரசேகரம் ராஜன், பாராளுமன்ற உறுப்பினர் கலையரசன், தமிழ் இளைஞர்கள், சில இனவாத நோக்கம் கொண்ட நிருபர்கள் என பலரும் அத்துமீறி எங்களுக்கு சொந்தமான காணிக்குள் தமிழர்களின் காணி என கூறிக்கொண்டு அட்டூழியம் செய்துள்ளார்கள். முழுமையாக அரசியலை நோக்காக கொண்டே இந்த காரியங்கள் நடக்கிறது. கல்முனை பிரதேச செயலக இழுபறி நிலை உடனடியாக முடிவுக்கு கொண்டுவரப்பட வேண்டும். இல்லாது போனால் எதிர்வரும் காலங்களில் ஒற்றுமையாக வாழும் தமிழ் முஸ்லிம் சமூகம் மனம் நோக்கும் நிலை வரும். இது தொடர்பில் அரசாங்கம் கவனம் எடுக்க வேண்டும் என்று கேட்டு கொண்டார்.

## காணாமல் போனவர்கள் குறித்த உண்மையான எண்ணிக்கை

அரசாங்கத்திடம் காணப்படுகிறது, அதனை அடிப்படையாகக் கொண்டே நட்டஈட்டை வழங்குதல் மற்றும் மரணச்சான்றிதழ் வழங்கும் செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுவதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

நாடாளுமன்றத்தில் கருத்து தெரிவிக்கும் போதே அவர் இந்த விடயத்தை கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இந்த நாட்டை அவமானப்படுத்த வேண்டும் என்ற எண்ணத்தில் செயற்படும் ஒரு தரப்பினர் பொய்யான தகவல்களுடன் கருத்துக்களை வெளியிடுகின்றனர்.

20 ஆயிரம், 30 ஆயிரம் மக்கள் காணவில்லை என பொய்யான தகவல்களை வெளியிடுகின்றனர். எனினும் 2009ஆம் ஆண்டிலிருந்து உண்மையில் எத்தனைப் பேர் காணாமல் போனார்கள் என்ற தகவல்களை அரசாங்கம் கண்டறிந்துள்ளது.

ஆகவே அவ்வாறு உண்மையிலேயே காணாமல் போனவர்களுக்கு மரணச் சான்றிதழையும், பாதிக்கப்பட்டவர்களுக்கு நட்டஈட்டையுட் வழங்க நாம் குறித்த அலுவலகத்தை ஊக்குவிக்கின்றோம்.

எமது அரசியல் யாப்பிற்கு அமைய கைதிகள் சித்திரவதைக்கு உள்ளாவதை தடுக்க வேண்டும். நீதவான் நீதிமன்ற நீதிபதிகள், மாதத்திற்கு ஒரு தடவையேனும் அவர்கள் பணியாற்றும் மாவட்ட எல்லைக்குள் அமைந்துள்ள சிறைச்சாலைககளுக்கு சென்று கைதிகள் மற்றும் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளவர்கள் தொடர்பில் ஆராய வேண்டும்.

இதற்கமைய சட்டத்தில் திருத்தம் செய்யத் தீர்மானித்துள்ளோம். இலங்கையில் நல்லிணக்க செயன்முறை தடம் புரளவில்லை, அது பலப்படுத்தப்படுகிறது. காணாமல்போனோர் அலுவலகம், இழப்பீடு அலுவலகம் மற்றும் தேசிய ஒருமைப்பாட்டிற்கும் நல்லிணக்கத்திற்குமான அலுவலகம் ஆகியவற்றின் நடவடிக்கைகள் தொடர்ந்து இடம்பெற்று வருகின்றன.

மூன்று நிறுவனங்களும் தங்கள் சேவைகளைத் தொடர்வதை உறுதிசெய்ய அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளன. சில எதிர்பார்ப்புகளுக்கு மாறாக, தேசிய ஒற்றுமையையும் நல்லிணக்கத்தையும் கட்டியெழுப்ப குறித்த அலுவலகத்திற்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

இழப்பீட்டு அலுவலகத்தின் முன்னைய அலுவலக பொறுப்பாளர்கள் தங்கள் பதவிக் காலம் முடியும் வரை செயற்பட அனுமதிக்கப்பட்டுள்ளனர். முன்னாள் தலைவர் பதவி விலகிய பின்னர் காணாமல் போனவர்கள் குறித்த அலுவலகத்திற்கு புதிய தலைவர் மற்றும் உறுப்பினர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இலங்கையின் நீதிமன்ற கட்டமைப்பை வலுப்படுத்தும் நோக்கில் பல்வேறு செயற்றிட்டங்களை முன்னெடுக்க வேண்டியுள்ளது. இதற்கமைய வழக்கு விசாரணைகளை துரிதப்படுத்தும் வகையில் இந்த வருட இறுதிக்குள் இலங்கையின் அனைத்து நீதிமன்றங்களையும் தொழிநுட்ப ரீதியில் மேம்படுத்தி டிஜிடல் மயப்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளோம்.

தாமதமாகும் நீதியை விரைவாக பெற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுக்கவுள்ளோம். நீதிமன்ற கட்டடங்களையும் அதிகரிக்க எதிர்பார்த்துள்ளோம். இதன் மூலம் தகுதி தராதரம் பாராது நீதியைப் பெற்றுக்கொடுக்க எதிர்பார்க்கின்றோம் என சுட்டிக்காட்டியுள்ளார்.


SwissLife
Select
சுவிசில் சொந்த வீடு
வாங்க விரும்பும் உறவுகளே,
அவதானமாகச் செயற்படுங்கள்.
உங்கள் கடனுக்கான வட்டி வீதம்
எப்போதும் அதிகரிக்க கூடும்.
எனவே, சரியான வங்கியையும்,
வட்டி வீதத்தையும்
தெரிந்து கொள்ளுங்கள்.
உங்கள் வாழ்வின் சகல
அம்சங்களிலும் உங்களோடு
கரங் கோர்க்கும்
ஒரே ஒரு நிறுவனம்...
மருத்துவ காப்புறுதி
வாகனக் காப்புறுதி
குழந்தைகளுக்கான காப்புறுதி
ஆயுட் காப்புறுதி
சட்டக் காப்புறுதி
Herr Krishnasamy
THILEEPAN
Dipl.Finanzberater IAF
Cicero : 15787
FIDLEG : KT 47598
Swiss Life Select AG
Zweigniederlassug Bern-Köniz
Sägerstrasse 79, 3098 Köniz.
Email : krishnasamy.thileepan@swisslife-select.ch Web : www.swisslife-select.ch
Telefon : 031 915 00 50 Telefax : 031 915 00 60 Handy : 079 889 60 65


Sj
SRI JEWELLERY
Swiss, Zürich இல் மிகப்
பிரமாண்டமாய் புதுப்பொலிவுடன்
பரம்பரை பரம்பரையாக
நகைத் தொழிலில்
அனுபவம் பெற்றவர்கள் நாங்கள்
வைர தாலி கொடி, மோதிரம், வளையல்
பெயர் பெண்டன், மற்றும் அனைத்து
நகைகளும் செய்து தரப்படும்.
திருத்த வேலைகளும் உடனுக்குடன்
செய்து தரப்படும்.
+41 43 366 80 09 / +41 79 898 51 01
Mattengasse 17, 8005, Zürich, Swiss
info@srijewellery.ch


Aaran Ayurveda
& Wellness Massage
Stampfenbachstrasse-24, 8001 Zurich, Tel: 043 243 60 66
Mobile: 079 940 1510 | www.aaranayurveda.ch
Krankenkasse Anerkannt


உதயகுமார் கல்வி நிலையம்
முனைக்காடு மேற்கு,
கொக்கட்டிச்சோலை
தொடர்புகளுக்கு:
076-1549129
+966539028295
+966502126923
n.uthayakumar1981@gmail.com


SHELVA SWISS
YOUR FUTURE OUR VISION
041 790 64 63 079 514 64 28
வீட்டுக்கடன்
0.62%
தொடக்கம்
10% இல்
சொந்த வீடு கட்ட
அல்லது வாங்க
இருக்கும் வீட்டை வைத்து
இன்னொரு வீட்டை வாங்க...
வீடு வாங்க. விற்க, கட்ட, திருத்த...
வீடு வாங்குவதற்கான
ஆயுட்காப்புறுதி
Architect வேலைகள்
இலங்கையில் வீடுகள், காணிகள்,
விற்க, வாங்க, கட்ட, திருத்த
இலங்கைக்கு போக
வேண்டிய தேவை இல்லை.
SWISS இல் இருந்து
கொண்டே செய்யலாம்.
» கிறங்கன்காசே
» ஆயுட்காப்புறுதி
» பயணக்காப்புறுதி
» சட்டக் காப்புறுதி


MATHE BILDUNGSZENTRUM
கணித கற்கைநெறி மையம்
MBZ
கல்வியே துணை
பள்ளித் தலைமைத்தும்
பேறெடுக்கும் பிள்ளைகள்.
அள்ளிப் பெற்றுவரும்
நிறைவான புள்ளிகள்!
உள்ளதை சொல்வதெனில்
எங்ஙனம் சாத்தியம்..
எள்ளளவும் பொய்யில்லை
எட்டிவந்து பாரும்!!
- MATHE BILDUNGSZENTRUM
Mathe மகேந்திரா-வின் தெளிவான
கற்பித்தலில் திருப்தியுறும் பெற்றோர்கள்.
S.MAHENDIRAN
076 431 83 79
mbz.mahe@gmail.com
MATHE மட்டுமல்ல
Deutsch, Französisch, Englisch, Gymi Prüfung
BMS, HMS, FMS, Gymi Probe
அத்தனைக்கும் கீழ்காணும் இடங்களில்
Oerlikon, Uster, Schaffhausen

# நுவரெலியா கல்வி வலயத்தில் பத்து பாடசாலைகள் தேசிய பாடசாலைகளாக தரம் உயர்த்தப்பட்டுள்ளது

(தலவாக்கலை பி.கேதீஸ்)

நுவரெலியாகல்வி வலயத்தில் பத்து பாடசாலைகள் தேசிய பாடசாலைகளாக தரம் உயர்தப்பட்டுள்ளதாகவும் அதில் தமிழ் மொழி ஏழு பாடசாலைகளும் சிங்கள மொழி பாடசாலைகள் இரண்டும் தமிழ் மற்றும் சிங்கள மொழி கலவன் பாடசாலை ஒன்றும் தேசிய பாடசாலைகளாக தரம் உயர்த்தப்பட்டுள்ளதாக நுவரெலியா மேலதிக வலய கல்வி பணிப்பாளர் எம்.மோகன்ராஜ் தெரிவித்தார்.

நுவரெலியா பரிசுத்த திரித்துவ கல்லூரி, கந்தப்பளை மெதடிஸ் தமிழ் மகா வித்தியாலம், தலவாக்கலை மகா வித்தியாலயம், கொட்டக்கலை மகா வித்தியாலயம், கொட்டக்கலை கேம்பிரிஜ்கல்லூரி, மெராயா தமிழ் மகா வித்தியாலயம், ஹோல்புறுக் தமிழ் மகா வித்தியாலயம், நுவரெலியா உயர்தர மகளீர் வித்தியாலயம் (சிங்களம்), தலவாக்கலை சுமன மகா வித்தியாலயம் (சிங்களம்),நுவரெலியா நல்லாயன் மகளீர் கல்லூரி (தமிழ் சிங்களம் கலவன் பாடசாலை) ஆகிய பத்து பாடசாலைகளும் தேசிய பாடசாலைகளாக தரம் உயர்த்தப்பட்டுள்ளது.



தேசிய பாடசாலைகள் நேரடியாக கல்வி அமைச்சின் நிர்வாகத்தின் கீழ் செயற்படும் மாகாணமும் வலயமும் மேற்பார்வை மாத்திரமே மேற்கொள்ள முடியும். தேசிய பாடசாலைகளில் உயர் தரத்தில் கலைப் பிரிவு, கணிதப் பிரிவு, விஞ்ஞான பிரிவு,வர்த்தகப் பிரிவு ஆகிய பிரிவுகள் அனைத்துமே காணப்படும். தேசிய பாடசாலைகளுக்கு அரசாங்கத்தினால் நேரடியாக நிதியொதுக்கீடு செய்யப்படும். அரசாங்கத்தினால் வழங்கப்படும் அனைத்து வளங்களும் தேசிய பாடசாலைகளுக்கு கிடைக்கும். தேசிய பாடசாலைகளுக்கு அதிகளவில் நிதியொதுக்கீடு செய்யப்படும். தேசிய நீரோட்டத்தில் போகும்போது மாகாண பாடசாலைகளுக்கு கிடைக்கும் வளங்கள் மிக மிக குறைவு.

ஆனால் தேசிய பாடசாலைக்கு கிடைப்பது அதிகம். ஆகவே அதிகமான வளங்களை கொண்டு தேசிய பாடசாலைகள் காணப்படும்.ஆசிரியர் இடமாற்ற விண்ணப்பங்களை கல்வி வலயமே விண்ணப்பம் செய்யும். தேசிய பாடசாலைகளில் கடமையாற்றும் ஆசிரியர்கள் இடமாற்றம் பெற விரும்பின் தேசிய பாடசாலைகளிலிருந்து விடுவிக்கப்பட்டே மாகாண பாடசாலைக்கு இடமாற்றம் பெற முடியும். அதேபோல மாகாண பாடசாலைகளில் கடமையாற்றும் ஆசிரியர்கள் இடமாற்றம் பெற விரும்பின் மாகாண பாடசாலைகளிலிருந்து விடுவிக்கப்பட்டே தேசிய பாடசாலைகளுக்கு இடமாற்றம் பெற முடியும். தேசிய பாடசாலைகளில் கடமையாற்றும் அதிபர்கள் இன்னொரு தேசிய பாடசாலைக்கே இடமாற்றம் பெற முடியும். அதிபர்,ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் தேசிய பாடசாலைகளை நல்ல முறையில் பயன்படுத்திக்கொள்ள வேண்டும் என்றார்.



# பூண்டுலோயா டன்சினன் பெருந்தோட்டத் தொழிலாளர்கள் ஆர்ப்பாட்டத்தில்

(க.கிஷாந்தன்)

அசாதாரண வகையில் தங்களை தனிமைபடுத்தியிருப்பதாக தெரிவித்து பூண்டுலோயா டன்சினன் தோட்ட மத்திய பிரிவைச் சேர்ந்த பெருந்தோட்டத் தொழிலாளர்கள் பலர் நேற்று செவ்வாய்க்கிழமை ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

ஒரு மாதத்திற்கும் அதிகமான காலம் தங்களை தோட்டத்திற்குள் தனிமைப்படுத்தி வைத்திருக்கின்ற காரணத்தினால் பாரிய அசௌகரியங்களுக்கும், பல்வேறு கஸ்டங்களுக்கும் தாங்கள் ஆளாகியிருப்பதாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட தொழிலாளர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

தனிமைப்படுத்தப்பட்டிருக்கும் காரணத்தினால் அரசாங்கத்திடமிருந்து கிடைக்கின்ற பொருட்கள் உதவிகள்கூட தங்களுக்கு இதுவரைக் கிடைக்கவில்லை என்றும், வாழ்க்கையை தொடர்ந்து நடத்த பொருளாதார நெருக்கடியை சந்தித்திருப்பதாகவும் அவர்கள் தெரிவிக்கின்றனர்.

மருந்துவ சேவைகள் மற்றும் அத்தியாவசிய சேவைகளுக்காகவும் குறித்த பிரதேசத்திலிருந்து வெளியே செல்லவும் முடியாத நிலைமைக்கு மத்தியில், பலர் பாதிக்கப்பட்டிருப்பதாகவும், அநீதியான முறையில் தாங்கள் தனிமைப்படுத்தப் பட்டிருப்பதால் வெளியிடங்களுக்குச் சென்று அன்றாடம் கூலிவேலை செய்தவர்களுக்கும் வருமானம் இழப்பு என பல பாதிப்பு ஏற்பட்டிருப்பதாகவும் அவர்கள் குறிப்பிடுகின்றனர்.

சுமார் 500 தொழிலாளர்கள் இவ்வாறு இன்று பல்வேறு பதாதைகளை ஏந்தியபடி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். தங்களை தனிமைப்படுத்தலில் இருந்து விரைவில் விடுவிக்கும்படியும் சுகாதாரப்பிரிவு அதிகாரிகளிடம் கோரிக்கையை முன்வைத்து இறுதியில் ஆர்ப்பாட்த்தைக் கைவிட்டனர்.

இதனையடுத்து, இப்பகுதி இன்று முதல் தனிமைப்படுத்தலிருந்து விடுவிக்கப்பட்டமை குறிப்பிடதக்கது.

# பூ பறித்த பெண்ணின் மாலையினை பறிக்க முற்பட்ட திருடன்

(வி.சுகிர்தகுமார்)

அக்கரைப்பற்று பொலிஸ் பிரிவிற்குட்பட்ட ஆலையடி வேம்பு பிரதான வீதியின் நாவற்காடு பிரதேசத்தில் அதிகாலை பூப்பறித்த பெண்ணொருவரின் மாலையினை பறிக்க முற்பட்ட கள்வன் தனது போனை தவறவிட்டுச் சென்ற சம்பவம் பதிவானது.

சம்பவத்தில் பெண் தன்னை சுதாகரித்துக்கொண்டு மாலை காப்பாற்றியதுடன் திருடனின் போனையும் கைப்பற்றினார்.

வழக்கம்போல் குறித்த பெண் அதிகாலை நேரம் வீதியோரம் பூப்பறித்து கொண்டிருந்தபோது வீதியால் வந்த திருடன் மாலை பறிக்க எத்தணித்துள்ளான். இந்நிலையில் குறித்த பெண் பூப்பறிக்க கையில் வைத்திருந்த கம்பால் அடித்து தடுக்க முற்பட்டபோது கள்வன் தனது போனையும் விட்டு விட்டு சென்றுள்ளான்.

இது தொடர்பில் குறித்த பெண் மற்றும் அவரது தம்பி உட்பட அக்கரைப்பற்று பொலிசாரிடம் முறைப்பாடு செய்ததுடன் கைப்பற்றப்பட்ட கைத்தொலைபேசியையும் ஒப்படைத்தனர். இந்நிலையில் பொலிசார் மற்றும் சம்மந்தப்பட்டவர்களின் சமயோகித புத்தியால் ஒரு சில மணித்தியாலங்களில் போனுக்குரியர்; என அடையாளம் காணப்பட்டவர் கைது செய்யப்பட்டார்.

இந்நிலையில் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டவர் பொலிஸ் நிலையத்திற்கு அழைத்துச் சென்ற பொலிசார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

இச்சம்பவம் தொடர்பில் புத்திசாதுரியமாக செயற்பட்ட பெண் மற்றும் அவரது சகோதரர் விரைந்து செயற்பட்ட பொலிசார் உள்ளிட்டவர்களை மக்கள் பாரட்டுகின்றனர்.

# முள்ளிப்பொத்தானை பெண் கொரோனாவுக்கு மரணம்

(எப்.முபாரக்)

கொரோனா தொற்றினால் முள்ளிப்பொத்தானை பகுதியைச் சேர்ந்த பெண்ணொருவர் கந்தளாய் வைத்தியசாலையில் உயிரிழந்துள்ளதாக வைத்தியசாலையின் பேச்சாளரொருவர் தெரிவித்தார்.

இவ்வாறு உயிரிழந்தவர் தம்பலகாமம்-முள்ளிப்பொத்தானை பகுதியைச் சேர்ந்த 54 வயது பெண்எனவும் தெரியவருகின்றது.

திருகோணமலை பொது வைத்தியசாலையில் நீரழிவு நோய் காரணமாக சிகிச்சை பெற்று வந்த நிலையில் அவருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாகவும், மேலதிக சிகிச்சைக்காக கந்தளாய் வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டு சிகிச்சை அளிக்கப்பட்ட நிலையில் உயிரிழந்துள்ளதாகவும் தெரிய வருகின்றது.

# காத்தான்குடி பிரதேச செயலகத்தினால் முன்னெடுக்கப்பட்ட சௌபாக்கிய சமூர்த்தி வாரம்



(எஸ்.எஸ்.அமிர்தகழியான்)

நாடெங்கிலும் முன்னெடுக்கப்படும் சௌபாக்கிய சமுர்த்தி வாரத்தை முன்னிட்டு மட்டக்களப்பு - காத்தான்குடி பிரதேச செயலகத்தினால் மின்சார வசதியில்லாத வீடுகளுக்கு புதிய மின் இணைப்பு வழங்குதல், உயர் தரப்பிரிவில் கல்வி கற்கும் மாணவர்களுக்கான புலமைப்பரிசில் வழங்குதல், லொத்தர் சீட்டிழுப்பு மூலம் வீடு பரிசாக வழங்குதல் போன்ற நிகழ்வு காத்தான்குடியில் முன்னெடுக்கப்பட்டது.

# கிராமத்துடனான சந்திப்பு கலந்துரையாடல்



(ஹஸ்பர் ஏ ஹலீம்)

ஜனாதிபதியின் 'கிராமத்துடனான சந்திப்பு' நிகழ்ச்சியின் 12 வது நிகழ்ச்சி பெப்ரவரி 27 ஆம் திகதி திருகோணமலை மாவட்டம் கோமரங்கடவெல பிரதேச செயலகத்தின் பக்மீகம கிராமத்தில் நடைபெற்றது.

பொதுமக்கள் ஜனாதிபதியிடம் எழுப்பிய பிரச்சினைகள் தொடர்பான பல திட்டங்கள் வெற்றிகரமாக செயல்படுத்தப்பட்டு வருகின்றன, மேலும் சம்பந்தப்பட்ட நிறுவனங்களைத் தொடர்புகொள்வதன் மூலம் அந்தப் பிரச்சினைகளுக்கு தீர்வுகளை வழங்க முடிந்தது.

இதுதொடர்பான முன்னேற்ற அறிக்கை தொடர்பிலான கலந்துரையாடல் திருமலை மாவட்டச் செயலகத்தில் வைத்து மாவட்ட அரசாங்க அதிபர் சமன் தர்ஷன பாண்டி கோராளாவின் தலைமையில் நடைபெற்றது.

குறித்த நிகழ்வின் போது ஜனாதிபதி அளித்த வாக்குறுதிகள் மற்றும் மக்கள் எழுப்பிய பிரச்சினைகள் தீர்க்கப்பட்டுள்ளன என்றும், பெரும்பாலான அபிவிருத்தி நடவடிக்கைகள் உரிய பிரிவில் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் அரசாங்க அதிபர் இதன் போது குறிப்பிட்டார்.

கல்வியின் முன்னேற்றம், பிரிவெனா கல்வி, காட்டு யானை பிரச்சினைகள், வீதி அபிவிருத்தி நடவடிக்கைகள், விவசாய அபிவிருத்தி, சுகாதாரம், நீர்ப்பாசனம், விவசாயம், குடிநீர் போன்றவை மதிப்பாய்வு செய்யப்பட்டு பணிகளை விரைவாக முடிக்க தேவையான ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இக் கலந்துரையாடலில் மாகாண பிரதமச் செயலாளர் துசித பி வணிகசிங்க ,ஜனாதிபதியின் ஒருங்காணைப்பாளர் உட்பட திணைக்கள தலைவர்கள் என பலர் கலந்து கொண்டனர்.







# ஆசிரியர்களுக்கு தடுப்பூசி வழங்கும் வரை பிராந்திய கற்றல் நிலையங்களுக்கு செல்ல வேண்டாம்

(படுவான்பாலகன்)

2000 பிராந்திய கற்றல் நிலையங்கில் கடமையாற்ற நியமிக்கப்படும் ஆசிரியர்களுக்கு தடுப்பூசி ஏற்றி மாணவர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் வரை இந்நிலையங்களுக்குச் செல்ல வேண்டாம் என இலங்கை ஆசிரியர் சேவை சங்கம் தெரிவித்துள்ளது.


செய்தியாளர்சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவித்த சங்கத்தின் செயலாளர் மகிந்த ஜயசிங்க, கல்வி அமைச்சு மாணவர்களின் கல்வியை சீரமைக்க முன்னெடுக்கும் எந்த திட்டத்தையும் எதிர்க்க வில்லை என்றும் ஆனால் அதற்கான உரிய பாதுகாப்பு வழிமுறைகள் கடைப்பிடிக்கப்பட வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார்.

மத்திய மாகாணத்தில் 442 நிலையங்களும் வடமேல் மாகாணத்தில் 345 நிலையங்களுமாக இந்நிலையங்கள் நாடுமுழுவதும் உருவாக்கப்பட்டுள்ளன.

நாட்டில் இன்னமும் கோவிட்19 நிலைமை சீராகவில்லை. குறையவுமில்லை. ஆனால் 5 ஆம் திகதியிலிருந்து இந்நிலையங்கள் ஆரம்பமாகின்றன.

எனவே, இங்கு கடமையாற்ற அழைக்கப்பட்டுள்ள ஆசிரியர்கள் மற்றும் அதிகாரிகளுக்கு அனைவருக்கும் தடுப்பூசி ஏற்றப்படல் வேண்டும்.

தடுப்பூசி பெற்றுக் கொள்ளாது இந்த கடமைகளில் கலந்து கொள்ள வேண்டாம் என நாம் ஆசிரியர்களிடம் வேண்டுகிறோம் என அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.


கோடைகால சுற்றுலா
கொண்டாட்டம்
இத்தாலி
2021
பயணம் வாழ்க்கையின் வழிகாட்டி...
24.07.2021 முதல்
30.07.2021 வரை
031 991 85 31
079 964 04 74
நல்லூர் டிராவல்ஸ்
ஆசியா, ஐரோப்பா முழுவதும் சுற்றுலா சேவை
Murtenstrasse 269, 3027 Bern
nallur@hotmail.com
nallurtravels


நல்லூர் சுவையகம்
உங்கள் இல்ல விழாக்கள் அனைத்தையும் சிறப்பித்திட
எங்கள் சைவ அசைவ உணவுகளைக்கொண்டு
மெருகூட்டுங்கள்.
Party Service
சுவிஸ் முழுவதிற்கும் எமது சேவை
மலிவு, தரம், நம்பிக்கை
எங்கள் விளம்பத்தை உடனுக்குடன் தெரிந்து கொள்வதிற்கு
எங்கள் Fb பக்கத்தை லைக் செய்யுங்கள். Nallur Travels
Nallur Angadi Murtenstrasse 269, 3027 Bern.
031 991 85 31 | 079 964 04 74


கோடைகால
சுற்றுலா கொண்டாட்டம்
10.07.2021 முதல் 16.07.2021 வரை 31.07.2021 முதல் 6.08.2021 வரை
Amazing
Spain
it begins with the pepole...
பேருந்து
புறப்படும் இடங்கள்
St Galan | Zurich | Baden
Aarau | Bern | Freiburg
Lausanne & Geneva.
நல்லூர் டிராவல்ஸ்
ஆசியா, ஐரோப்பா முழுவதும் சுற்றுலா சேவை
Murtenstrasse 269, 3027 Bern
nallur@hotmail.com
nallurtravels
031 991 85 31
079 964 04 74


2021
கோடைகால
சுற்றுலா
கொண்டாட்டம்
Wonderful
Portugal
17.07.2021 முதல்
23.07.2021 வரை
031 991 85 31
079 964 04 74
நல்லூர் டிராவல்ஸ்
ஆசியா, ஐரோப்பா முழுவதும் சுற்றுலா சேவை
Murtenstrasse 269, 3027 Bern
nallur@hotmail.com
nallurtravels




# இரத்தினபுரி தமிழ் மகா வித்தியாலத்திற்கு மூன்று மாடி கட்டிடம் அமைக்கப்படும்

(தலவாக்கலை பி.கேதீஸ்)

நாட்டில் அண்மையில் நிலவிய சீரற்ற காலநிலையால் இரத்தினபுரி பிரதேசத்தில் பாரிய மழை வீழ்ச்சி பதிவான நிலையில் இரத்தினபுரி தமிழ் மகா வித்தியாலயத்தின் தடுப்புச்சுவர் இடிந்து விழுந்ததால் கல்லூரியின் பிரதான மண்டபம் சேதத்திற்குள்ளானது. மேலும் பாடசாலையின் வளப்பற்றாக்குறை தொடர்பாக தோட்ட வீடமைப்பு மற்றும் சமுதாய உட்கட்டமைப்பு வசதிகள் இராஜாங்க அமைச்சர் ஜீவன் தொண்டமான் அவர்களின் கவனத்திற்கு கொண்டுவந்தனர்.

இதனையடுத்து பாடசாலையின் அதிபர், ஆசிரியர்கள் மற்றும் பழைய மாணவர்களுக்கும் இடையிலான கலந்துரையாடல் அமைச்சின் அலுவலகத்தில் இடம்பெற்றது.

இதன்போது பாதிப்பிற்குள்ளான இரத்தினபுரி தமிழ் மகாவித்தியாலயத்திற்கு சகல வசதிகளுடனும் கூடிய மூன்று மாடிகட்டிடத்தை அமைச்சின் நிதி ஒதுக்கீட்டின் கீழ் நிர்மாணித்து தருவதாக இராஜாங்க அமைச்சர் உறுதியளித்தார். இக்கலந்துரையாடலில் பிரதமரின் இணைப்புச்செயலாளர் செந்தில் தொண்டமான், பிரஜாசக்தி செயற்திட்டத்தின் பணிப்பாளர் பாரத் அருள்சாமி, இ.தொ.காவின் உப செயலாளர் ரூபன் பெருமாள் பாடசாலையின் அதிபர்,ஆசிரியர்கள் மற்றும் பழைய மாணவர்கள் உட்பட பலர் கலந்துக் கொண்டனர்.



# விழிப்புலனற்ற உறுப்பினர்களை கொண்ட குடும்பங்களுக்கு உலருணவுப் பொதிகள்



(ஏறாவூர் நிருபர்)

கொவிட் தொற்று அச்சம் காரணமாக வாழ்வாதாரத்தை இழந்த குடும்பங்களுக்கு அரசாங்கத்தினால் வழங்கப்படும் நிவாரண உதவிகளுக்கு இணைவாக பொதுநல அமைப்புக்களும் பல்வேறு உதவிகளை வழங்கி வருகின்றன.

அந்த அடிப்படையில் மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள விழிப்புலனற்ற உறுப்பினர்களைக்கொண்ட ஒரு தொகுதி குடும்பங்களுக்கு உலருணவுப்பொதிகள் கையளிக்கும் நிகழ்வு நடைபெற்றது.

வொயிஸ் பவுண்டேஷன் அமைப்பு இதற்கான நிதியினை வழங்கியிருந்தது.

அமைப்பின் கிழக்கு மாகாண இணைப்பாளரும் மதபோதகருமான எஸ்கே. விஸ்வநாத் தலைமையில் உதயம் விழிப்புலனற்றோர் சங்கத்தின் அலுவலக வளாகத்தில் இந்நிகழ்வு நடைபெற்றது.களுவாஞ்சிக்குடி,வாழைச்சேனை, செங்கலடி, கிரான், மற்றும் ஆரையம்பதி போன்ற பிரதேசங்களைச் சேர்ந்த விழிப்புலனற்றவர்கள் இப்பொதிகளைப் பெற்றுக் கொண்டனர்.

# வீரமுனை சிந்தா யாத்திரைப் பிள்ளையார் தேவஸ்தான பிரம்மோற்சவ பெருவிழாவும், கொடியேற்றமும்



(நூருள் ஹுதா உமர், பாரூக் சிஹான், ஐ.எல்.எம். நாஸிம்)

சம்மாந்துறை- வீரமுனை சிந்தா யாத்திரைப் பிள்ளையார் தேவஸ்தான பிரம்மோற்சவ பெருவிழாவும், கொடியேற்றமும் நேற்று காலை நடைபெற்றது.

பிரதிஷ்டா பிரதம சிவாச்சாரியார் சர்வதேச இந்துமத குரு பீடாதிபதி சிவாகம கலாநிதி அருள்ஜோதி ஸ்ரீஐயப்பதாஸ சாம்பசிவ சிவாச்சாரியார் அவர்களின் தலைமையிலான சிந்தா யாத்திரைப் பிள்ளையார் தேவஸ்தான பிரதம குரு சிவஸ்ரீ கு. நிமலேஸ்வரக் குருக்கள் அடங்கிய வீரமுனை இந்து குருமார்களின் விசேட பூஜை வழிபாடுகளுடனும், பிராத்தனைகளுடனும் இடம்பெற்ற பிரம்மோற்சவ பெருவிழாவும் கொடியேற்ற நிகழ்வும் மங்கள இசைகள் முழங்க பூஜைகளுடன் நடைபெற்றது.

கொரோணா சுகாதார வழிமுறைகள் பின்பற்றப்பட்டு மட்டுப்படுத்திப்பட்ட ஆலய பரிபாலன சபையினர் மாத்திரமே இந்நிகழ்வுக்கு அனுமதிக்கப்பட்டிருந்தனர். இன்று ஏற்றப்பட்ட கொடியானது 10 நாட்களின் பின்னர் எதிர்வரும் 15ம் திகதி விசேட பூஜைகளுடன் கொடி இறக்கி வைக்கப்படவுள்ளது குறிப்பிடத்தக்கது.



# களுதாவளை சுயம்பு லிங்க பிள்ளையார் ஆலய வருடாந்த உற்சவம் ஆரம்பம் பக்கதர்களுக்குத் தடை

(ரக்ஸனா)



களுதாவளை சுயம்பு லிங்கப் பிள்ளையார் ஆலயத்தின் வருடாந்த உற்சவம் செவ்வாய்கிழமை(06) ஆரம்பிக்கப்பட்டு எதிர்வரும் 15ஆம் திகதி தீத்தோற்சவத்துடன் நிறைவுபெறவுள்ளது. இவ்வருடம் உற்சவகாலத்தில் பக்தர்கள் எவரும் ஆலயத்திற்குள் வருவதற்கு முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது.என களுதாவளை சுயம்பு லிங்கப்பிள்ளையார் ஆலயத்தின் தலைவர் கணபதிப்பிள்ளை பாஸ்கரன் தெரிவித்துள்ளார். மேற்படி ஆலயத்தில் செவ்வாய்கிழமை(07) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில்.

உலகளாவிய ரீதியிலும், நமது நாட்டிலும் கொரோனா தொற்று மிகவும் மோசமாக தீவிரமடைந்துள்ள காரணத்தினால், ஆலயம் சார்ந்து மக்கள் கூடுவதைத் தவிர்க்க வேண்டியுள்ளது. எனவே ஆலய உற்சவம் ஆரம்பிக்கப்படும் நாளிலிருந்து திருவிழா முடியும் வரைக்கும் ஆலய கடமைகளுக்காக 15 பேர் மாத்திரம்தான் ஆலயத்தினுள் அனுமதிக்கப்பட்டுள்ளார்கள். ஏனைய எவரும் ஆலயத்திற்குள் அனுமதிக்கப்படமாட்டார்கள். எனவே பக்தர்கள் இந்நிலமையைக் கருத்திற்கொண்டு ஆலயத்திற்கு வருவதை முற்றாகத் தவித்துக்கொள்ளவும். வரவேண்டாம் என மிகவும் பணிவாக வேண்டிக் கொள்கின்றோம்.

மேலும் இக்காலத்தில் பக்தர்கள் ஆலயத்திற்கு வருகைதந்தால் அதனூடாக கொரோனோ தெற்று பரவக்கூடிய சந்தர்ப்பம் உள்ளன. அந்த ஒரு கெட்டபெயர் ஆலயத்திற்கு வரக்கூடாது, அதனைத் தொடர்ந்து கிராமத்திலுள்ள மக்களுக்கும் பின்னர் அந்த பாதிப்பு ஏற்படும், மேலும் இலங்கைககும் இந்த பாதிப்பு ஏற்பட வாய்ப்பு உள்ளது. அந்த வகைய்ல் அரச அறிவுறுத்தல்களுக்கு அமையவும், எமது சுய சிந்தனைகளுக்கமையவும், இம்முறை திருவிழாவை அமைதியாகவும் சிறப்பாகவும் செய்வதற்கு ஏற்பாடு செய்திருக்கின்றோம். இதற்கு ஒத்துழைப்பு வழங்குமாறு தாழ்மையுடன் கேட்டுக் கொள்கின்றோம். திருவிழா நிகழ்வுகளை சமூக ஊடகங்கள் வாயிலாக நேரடியாக அஞ்சல் செய்ய இருக்கின்றோம். அதனை வீட்டிலிருந்தவாறே தரிசிக்கலாம் என்பதைத் தெரிவிகத்துக் கொள்கின்றோம்.

ஆலய கிரியைகள் செவ்வாய்கிழமை(06) மாலை 6 மணியளவில் ஆரம்பிக்கப்பட்டு, ஸ்நாபிஷேகம் இரவு 7 மணிக்கு நடைபெற்று தொடர்ந்து வசந்த மண்டப பூஜை, இடம்பெற்று பின்னர் சுவாமி உள்வீதி திருவிழா நடைபெறும். இம்முறை சுவாமி உள்வீதி திருவிழா மாத்திரம்தான் நடைபெறும், மாம்பழத் திருவிழாவும், வெளி வீதி திருவிழாவும் நடைபெறமாட்டாது. 15ஆம் திகதி காலை ஆனி உத்தரத்தில் தீர்த்தோற்சவம் நடைபெறும்.

எமது ஆலயத்தில் வருடாந்தம் திருவிழாவோடு சேர்ந்து கிராம மக்களும் இந்து இளைஞர் மன்றமும் இணைந்து வருடாந்தம் மாபெரும் அன்னதானம் வழங்குவதும் வழக்கம் இம்முறை பக்தர்களின் வருமை முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளதனால் அன்னதானம் வழங்கும் செயற்பாடும், ஏனைய பெரிய நிகழ்வுகள் எதுவும் இம்முறை ஆலயத்தில் நடைபெற மாட்டாது என்பதையும் மக்களுக்குத் தெரிவித்துக் கொள்கின்றோம் என அவர் இதன்போது தெரிவித்தார்.

# பதவி ஸ்ரீபுர ஜெயந்திவெவ கிராமத்தில் கைப்பணி உற்பத்தி கிராமம் திறந்து வைப்பு

(எப்.முபாரக்)



சௌபாக்கிய உற்பத்தி கிராமம் வேலைத்திட்டத்தின் கீழ் பதவி ஸ்ரீபுர பிரதேசத்தில் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

பதவி ஸ்ரீபுர ஜெயந்திவெவ கிராமத்தில் காகிதம், அந்தூரியம் மற்றும் கைப்பணி உற்பத்திக் கிராமமாக திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் அபிவிருத்திக் குழுவின் இணைத்தலைவருமான கபில அத்துக்கோரலவினால் திங்கட்கிழமை திறந்து வைக்கப்பட்டது.

கிராமப்புற குடும்பங்களின் பொருளாதாரத்தை மேம்படுத்தும் நோக்கத்துடன் தொழில்முனைவோரை உருவாக்குவதற்கான ஒரு முக்கிய முயற்சியாக இந்த திட்டம் அரசாங்கத்தால் தொடங்கப்பட்டுள்ளது, இதன் மூலம் குடும்பங்களின் வருமானத்தை அதிகரிக்கும் வாய்ப்பை வழங்கும் என்று பாராளுமன்ற உறுப்பினர் தெரிவித்தார்.

இதன் போது அப்பகுதியில் மலசல கூடவசதிகள் இல்லாத 25 குடும்பங்களுக்கு நிர்மாணிப்பதற்கான கடிதங்களும் கையளிக்கப்பட்டன.

இந்நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினர்,மாவட்ட அரசாங்க அதிபர் சமன் தர்சன பாண்டிக்கோரல மற்றும் பதவிஸ்ரீபுர பிரதேசசெயலாளர் புஸ்பகுமார,உத்தியோகத்தர்கள் பொது மக்கள் எனப்பலரும் கலந்து கொண்டார்கள்.

# தலவாக்கலை சதொச கிளையில் ஒருவருக்கு கொரோனா தொற்று

தலவாக்கலை பி.கேதீஸ்

தலவாக்கலை நகரிலுள்ள லங்கா சதொச கிளை தற்காலிகமாக மூடப்பட்டுள்ளதாக தலவாக்கலை பொது சுகாதார அதிகாரி ருவான் சுமனசேகர தெரிவித்தார்.

தலவாக்கலை நகரிலுள்ள லங்கா சதொச கிளையில் வேலை செய்யும் ஊழியர் ஒருவருக்கு கொவிட் 19 கொரோனா வைரஸ் தொற்று ஏற்பட்டதையடுத்து லங்கா சதொச கிளை தற்காலிகமாக மூடப்பட்டது.

அங்கு பணிபுரிந்த ஊழியர்கள் தங்களின் வீடுகளில் தங்களைத் தனிமைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மூடப்பட்டுள்ள லங்கா சதொச கிளை தொற்று நீக்கம் செய்யப்பட்ட பின்னர் புதிய ஊழியர்களுடன் திறக்கப்படலாம் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# சௌபாக்கியா வாரத்தை முன்னிட்டு வீடுகள் கையளிப்பு



சௌபாக்கியா வாரத்தை முன்னிட்டு மட்டக்களப்பு மாவட்டத்தின் ஓட்டமாவடி பிரதேச செயலாளர் பிரிவில் சமூர்த்தி சீட்டிழுப்பு நிதியத்தின் மூலம் நிர்மாணிக்கப்பட்ட வீடுகள் பயனாளிகளிடம் இன்று கையளிக்கப்பட்டது.

சமூர்த்தி சீட்டிழுப்பு நிதியத்தின் மூலம் நடைமுறைப்படுத்தப்படும் சமூர்த்தி விசேட வீடமைப்பு வேலைத்திட்டத்தில் மாஞ்சோலை கிராம சேவகர் பிரிவில் அமைக்கப்பட்ட இரண்டு வீடுகள் பயனாளிகளிடம் கையளிக்கும் நிகழ்வு பிரதேசசெயலாளர் வீ.தவராஜா தலைமையில் நடைபெற்றது.

சமூர்த்தி சீட்டிழுப்பு நிதியுதவியின் கீழ் ஒரு வீட்டிற்கு தலா இரண்டு இலட்சம் ரூபா செலவிலும் பயனாளிகளின் பங்களிப்புடன் பூர்த்தி செய்யப்பட்டுள்ள இவ் வீடுகளை கையளிக்கும் நிகழ்வில் செயலக சமுர்த்தி தலைமைபீட முகாமையாளர் எம்.ஐ.அஸீஸ், சமுர்த்தி கருத்திட்ட முகாமையாளர் எம்.பாஸ்கரன், சமுர்த்தி சமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் எம்.என். எம்.சாஜஹான், சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் ஏ.எல்.எம்.நியாஸ் ஆகியோர் கலந்து கொண்டனர்.

நிரந்தர வீடில்லாத வறுமைக் கோட்டின் கீழ் உள்ள சமூர்த்தி பெறும் குடும்பங்களுக்கு அவர்களின் சொந்த இடங்களில் வீடமைத்து கொடுக்கும் அரசின் இவ் வேலைத்திட்டத்தின் கீழ் நிர்மாணிக்கப்பட்டு வழங்கி வைக்கப்பட்டது.



# 45 வயதைத் தாண்டிய பட்டதாரிகள் மீது அரசு எவ்வித கவனமும் கோள்ளவில்லை




(மட்டுநிருபர்)

குறைந்த கல்வித் தகமைகளைக் கொண்ட இளைஞர் யுவதிகளுக்கு வேலைவாய்ப்பு வழங்குவதற்காக புதிய புதிய நிகழ்ச்சித் திட்டங்களூடாக ஒருலெட்சம் வேலைவாய்ப்பு என்னும் செயற்திட்டங்களை உருவாக்கும் அரசாங்கம் 45 வயதுக்கு மேற்பட்ட வேலையற்ற பட்டதாரிகளுக்கான நிகழ்ச்சித் திட்டங்களை உருவாக்குவதில் தாமதத்தைக் காட்டுகின்றது. 45 வயதைத் தாண்டி பட்டதாரிகள் மீது இந்த அரசு எவ்வித கவனமும் கொள்ளவில்லை என மட்டக்களப்பு மாவட்ட வேலையற்ற பட்டதாரிகள் சங்கத்தின் 45 வயதைத் தாண்டிய பட்டதாரிகள் தங்கள் ஆதங்கத்தை வெளிப்படுத்தியுள்ளனர்.

மட்டு ஊடக அமையத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர்கள் இவ்வாறு தெரிவித்துள்ளனர். இது தொடர்பில் அவர்கள் மேலும் குறிப்பிடுகையில்,

அரசாங்கத்தினால் அறுபதாயிரம் பட்டதாரிகளுக்கு வேலைவாய்ப்பு வழங்குவதற்கான அமைச்சரவை அனுமதி பெறப்பட்டிருந்தும் சுமார் ஐம்பத்து மூவாயிரத்து இருநூறு பட்டதாரிகளுக்கு மாத்திரமே வேலை வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது. அதிலும் முக்கியமாக 45 வயதைத் தாண்டிய பட்டதாரிகள் நிராகரிக்கப்பட்டுள்ளார்கள். அவர்கள் 45 வயதைத் தாண்டிய பின்னர் பட்டம் முடித்தவர்கள் அல்ல. 45 வயதுக்கு முன்னரே பட்டம் முடித்தவர்கள். அவர்களுக்கான வேலைவாய்ப்பை வழங்குவதை அரசு இன்னமும் தாமதப்படுத்தி வருகின்றது.

கடந்த அரசும் சரி, இந்த அரசும் சரி ஒவ்வொரு அரசாங்கமும் சாக்குப் போக்குகளைச் சொல்லி 45 வயதுக்கு மேற்பட்ட பட்டதாரிகளை நிராகரித்துக் கொண்டே இருக்கின்றாதர்கள். 45 வயதைத் தாண்டிய பட்டதாரிகளுக்கான வேலைவாய்ப்பு தொடர்பில் இதுவரை எந்தவித திட்டங்களும் வகுக்கவில்லை என்று கூறுகின்றார்கள். ஆனால் சாதாரண தரம் நிறைவு செய்யாத, குறைந்த கல்வித் தகமைகளைக் கொண்ட இளைஞர் யுவதிகளுக்கு வேலைவாய்ப்பு வழங்குவதற்காக புதிய புதிய நிகழ்ச்சித் திட்டங்களை உருவாக்கிக் கொண்டிருக்கின்றார்கள். அவர்களுக்காக ஒரு லெட்சம் வேலைவாய்ப்பு என்னும் திட்டம் உருவாக்கப்பட்டது.

அவ்வாறான செயற்திட்டங்களை உருவாக்கும் அரசாங்கத்திற்கு 45 வயதுக்கு மேற்பட்ட வேலையற்ற பட்டதாரிகளுக்கான நிகழ்ச்சித் திட்டங்களை உருவாக்குவதில் தாமதத்தைக் காட்டுகின்றது. 2014 மற்றும் 2019ம் ஆண்டுகளில் செயற்பட்ட அரசாங்கங்கள் 45 வயதைத் தாண்டிய பட்டதாரிகளின் வேலைவாய்ப்பிற்காக அமைச்சரவை அனுமதி பெற்று அவர்களை வேலைக்கு உள்ளீர்த்துள்ளன. தற்போது நாடு பூராகவும் சுமார் %24 பட்டதாரிகள் வரையில் 45 வயதைத் தாண்டி இருக்கின்றார்கள். அவர்கள் மீது எவ்வித கவனமும் இந்த அரசினால் எடுக்கப்படவில்லை.

பெரும்பான்மை சமூகம் இருக்கின்ற பகுதிகள் பட்டதாரிகள் தொடர்பில் பாரிய போராட்டங்கள் அரசியல்வாதிகளின் பின்னணியில் இடம்பெறுகின்றன. ஆனால் மட்டக்களப்பு மாவட்டத்தைப் பொருத்தவரையில் இதுவரைக்கும் 45 வயதைத் தாண்டிய பட்டதாரிகள் தொடர்பில் எவ்வித முன்னெடுப்புகளோ, நகர்வுகளோ மேற்கொள்ளப்படவில்லை. அவர்கள் இது தொடர்பில் பாராளுமன்றத்திலும் பேசவில்லை.

இதற்கு முந்திய காலங்களில் 45 வயதுக்கு மேற்பட்ட பட்டதாரிகளுக்கு நியமனம் வழங்கப்பட்டது. இந்த அரசாங்கத்தின் போதும் 50 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு தொண்டர் ஆசிரியர் நியமனம் வழங்கப்பட்டது. ஆனால் பட்டதாரிகள் நாங்கள் புறக்கணிக்கப்பட்டுள்ளோம். எமது இந்தப் பிரச்சினையைக் கொண்டு நகர்த்துவது யார் என்பது தற்போது கேள்விக்குறியாக இருக்கின்றது. மட்டக்களப்பு மாவட்டத்தில் இருக்கும் அனைத்து மக்கள் பிரதிநிதிகளிடமும் எமது விடயங்கள் தொடர்பில் தெரிவித்திருந்தோம். ஆனால் எவரும் இதுவரை அதற்கான முறையான பதிலிறுப்புச் செய்யப்படவில்லை.

எமது வேலைவாய்ப்பு நிராகரிக்கப்பட்டமைக்கு ஓய்வூதியம் வழங்கப்படுவது சிரமம் என்ற கருத்தும் தெரிவிக்கப்படுகின்றது. நாம் எங்களுக்கான ஓய்வூதியதம் கேட்கவில்லை. ஒரு அரசாங்கத் தொழிலினைத் தான் கேட்கின்றோம். ஏதேனும் சபைகள் அல்லது திணைக்களங்களில் எமக்கான தொழில்வாய்ப்பினை வழங்கி ஓய்வூதியம் இல்லாவிட்டாலும் தொகை அடிப்படையில் வழங்குவதற்கான திட்டத்தினை மேற்கொண்டு எமக்கான தொழில் வாய்ப்பினைத் தருமாறே கேட்கின்றோம்.

அமைச்சரவையில் அனுமதி பெறப்பட்ட அறுபதாயிரம் பட்டதாரிகளுக்கான வேலைவாய்ப்பில் சுமார் ஏழாயிரம் வரையில் வேலைவாய்ப்புகள் இன்னும் மீதமிருக்கின்றது. அந்த ஒதுக்கப்பட்ட வேலைகளுக்கான நிதி திறைசேரியில் இருக்கும் போது 45 வயதுக்கும் மேற்பட்ட %24 பேருக்கும் வேலைவாய்ப்பினை வழங்குவது அரசிற்கு மிகப் பெரிய வேலையாக இருக்காது. ஆனால் அரசு இதனைப் புறந்தள்ளிக் கொண்டிருக்கின்றது.

எனவே நாங்கள் இதனை இவ்வாறே தொடர விட முடியாது. எமக்கான போராட்டத்தை நாங்கள் முன்னெடுப்பதற்குத் தீர்மானித்திருக்கின்றோம். நாங்கள் ஒரு உண்ணாவிரதப் போராட்டத்தினை மாவட்ட செயலகத்திற்கு முன்னாள் மேற்கொள்வதற்கு உத்தேசித்துள்ளோம். எமது மட்டக்களப்பு மாவட்;டத்தில் 45 வயதுக்கும் மேற்பட்ட பட்டாதாரிகள் சுமார் 25க்கும் மேற்பட்டவர்கள் இருக்கிறார்கள். எனவே நாங்கள் இந்த உண்ணாவிரதப் போரட்டத்தினை மேற்கொள்ளும் போது அவர்களுக்கு ஏதும் பாதிப்புகள், உயிரிழப்புகள் ஏற்படுகின்ற பட்சத்தில் அதன் முழுப்பொறுப்பும் அரசாங்கத்தையும், இந்த மாவட்டத்தின் மக்கள் பிரதிநிதிகளையுமே சாரும் என்று தெரிவித்தனர்.

# கிழக்கு வைத்தியசாலைகளுக்கு ஒட்சிசனுடன் கூடிய சிலிண்டர்களை வழங்கியுள்ள அமெரிக்க யூத உலக சேவை










(எஸ்.எஸ்.அமிர்தகழியான்)

கிழக்கு மாகாணத்திலுள்ள மட்டக்களப்பு அம்பாறை மற்றும் திருகோணமலை மாவட்டங்களிலுள்ள 20 கொவிட் வைத்தியசாலைகள் மற்றும் தனிமைப்படுத்தல் நிலையங்களில் கொவிட் தொற்றிற்குள்ளானவர்களின் நலன் கருதி அமெரிக்க யூத உலக சேவை (AMERICAN JEWISH WORLD SERVICE) நிறுவனத்தின் நிதி அனுசரணையுடனும் கிழக்கு மாகாண பங்காளர் அமைப்புக்களின் உதவிகளுடனும் 7.7 மில்லியன் பெறுமதி கொண்ட 100 ஒட்சிசனுடன் கூடிய சிலிண்டர்களையும், 100 ஒட்சிசன் றெகுலேற்றர்களையும் வழங்கும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

அதனடிப்படையில் மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள 6 வைத்தியசாலைகளுக்காக 45 ஒக்சிஜன் சிலின்டர்களையும் 48 ரெகுலேட்டர்களையும் நேற்று (06) மட்டக்களப்பு மாவட்ட பிராந்திய சுகாதார பணிமனை ஒன்றுகூடல் மண்டபத்தில் வைத்து மட்டக்களப்பு மாவட்ட அருவி பெண்கள் வலையமைப்பின் பணிப்பாளர் சிரேஸ்ட சட்டத்தரணி மயூரி ஜனன் அவர்களது தலைமையில் இடம் பெற்ற நிகழ்வின்போது கிழக்கு மாகாண ஆளுணர் அனுராதா ஜகம்பத் அவர்களினால் மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பிரதி பணிப்பாளரிடம் கையளிக்கப்பட்டது.

இன்று உலகையோ ஆட்டிப்படைத்துக் கொண்டிருக்கும் கொவிட்டின் 3வது அலைத் தாக்கமானது குறிப்பாக இலங்கையின் கிழக்கு மாகாணத்தில் வழமைக்கு மாறாக பாரிய பாதிப்புக்களை ஏற்படுத்தி வருகின்றது, இந்நிலையில் கொவிட் தொற்றாளர்களுக்காக சிகிச்சையளிக்கும் வைத்தியசாலைகள் மற்றும் தனிமைப்படுத்தல் நிலையங்களிற்கு இவ் ஒக்சிஜன் தேவையுள்ளதனை பிராந்திய சகாதார சேவைகள் பணிமனையின் ஊடாக விடுக்கப்பட்ட வேண்டுகோளிற்கிணங்க மட்டக்களப்பு மாவட்ட அருவி பெண்கள் வலையமைப்பினால் 45 ஒக்சிஜன் சிலின்டர்களையும் 48 ரெகுலேட்டஸ்களும் இதன்போது வழங்கி வைக்கப்பட்டுள்ளது.

கிழக்கு மாகாண ஆளுனர் அனுராதா ஜகம்பத் அவர்கள் பிரதம அதிதியாக கலந்துகொண்ட நிகழ்வில் மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபரும் மாவட்ட கொவிட் தடுப்பு செயலணியின் தலைவருமாகிய கே.கருணாகரன், அகம்

மனிதாபிமான வள நிலையத்தின் இணைப்பாளர் க.லவகுசராசா, மட்டக்களப்பு மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பிரதி பணிப்பாளர் வைத்தியர் அச்சுதன், கிழக்கு மாகாண சுற்றுலாத்துரை தவிசாளர் ஹரிப்பிரதாப் ஆகியோர் அதிதிகளாக கலந்து கொண்டதோடு மட்டக்களப்பு மாவட்ட அருவி பெண்கள் வலையமைப்பின் பணிப்பாளர் சட்டத்தரணி மயூரி ஜனன் உள்ளிட்ட வலயமைப்பின் உறுப்பினர்களும் கலந்து சிறப்பித்திருந்தனர்.

## திருக்கோவில் பிரதேச செயலக சமூர்த்தி பிரிவினால்
# ஆழ்கடல் மீனவருக்கு மீன்பிடி வள்ளம் வழங்கி வைப்பு

(திருக்கோவில் நிருபர்)

அம்பாரை திருக்கோவில் பிரதேச செயலகத்தின் சமூர்த்தி அபிவிருத்தி திணைக்களப் பிரிவின் ஊடாக விநாயகபுரம் மீவனர் ஒருவருக்கு ஆழ்கடல் மீன்பிடி வள்ளம் ஒன்று இன்று வழங்கி வைக்கப்பட்டுள்ளன.

இந்நிகழ்வு விநாயகபுரம் 04 மீன்பிடி இறங்கு துறையில் சமூர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தின் திருக்கோவில் பிரதேச தலைமை முகாமையாளர் பி.பரமானந்தம் தலைமையில் இடம்பெற்று இருந்தன.



இவ் ஆழ்கடல் மீன்பிடி வள்ளமானது சமூர்த்தி லொத்தர் சீட்டிழுப்பின் ஊடாக தெரிவு செய்யப்பட்டு இருந்த மீனவருக்கு சுமார் 2இலட்சம் பெறுமதியான மீன்பிடி வள்ளம் வழங்கி வைக்கப்பட்டுள்ளன.

இந்நிகழ்வில் திருக்கோவில் பிரதேச செயலாளர் ரீ.கஜேந்திரன் பிரமத அதிதியாக கலந்து கொண்டு வைபவ ரீதியாக கையளித்து இருந்ததுடன்

நிகழ்வில் சமூர்த்தி தலைமை முகாமையாளர் பி.பரமானந்தம் விநாயகபுரம் சமூர்த்தி வங்கி முகாமையாளர் திருமதி கவிதா கிருதாஷன்; வங்கி உதவி முகாமையாளர் ஐ.ஞானரெத்தினம் சமூர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் சற்குரு ஆகியோரும் கலந்து கொண்டு இருந்தனர்.

## பிரசாந்தனுக்கு பிணை

கொவிட் 19 அச்சுறுத்தல் நிலையினைக் கருத்திற் கொண்டு Zoom தொழில்நுட்பத்தின் ஊடாக குறித்த வழக்கு விசாரனைகள் எடுத்துக் கொள்ளப்பட்டபோது, பிரசாந்தன் சார்பில் மேற்கொள்ளப்பட்டிருந்த மேன்முறையீட்டின் அடிப்படையில் நீதிமன்றத்தினால் பிணை வழங்கப்பட்டுள்ளது.

## ஆலையடிவேம்பில் இரு வீடுகள் கையளிப்பு; வீடொன்றிற்கான
# இரண்டாம் கட்ட காசோலையும் வழங்கி வைப்பு

(வி.சுகிர்தகுமார் )

சமுர்த்தி சௌபாக்கியா வேலைத்திட்டத்தின் கீழ் ஆலையடிவேம்பு பிரதேச செயலாளர் பிரிவில் அமைத்துக்கொடுக்கப்பட்ட இரு வீடுகள் மக்களிடம் கையளிக்கப்பட்டதுடன் 6 இலட்சம் பெறுமதியில் நிர்மாணிக்கப்படும் வீடொன்றிற்கான இரண்டாம் கட்ட காசோலையும் இன்று வழங்கி வைக்கப்பட்டது.

அரசாங்கத்தின் கொள்கைகளுக்கு அமைய இலங்கை சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தின் நிதியீட்டதுடன் நடைமுறைப்படுத்தப்படும் வீடற்றவர்களுக்கான வீடுகளை பெற்றுக்கொடுக்கும் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் மக்களின் பங்களிப்போடு வீடுகள் அமைத்து கொடுக்கப்பட்டு வருகின்றது.

இவ்வாறு ஆலையடிவேம்பு பிரதேச



செயலாளர் பிரிவில் நாவற்காடு பிரதேசத்தில் அமைத்துக்கொடுக்கப்பட்ட இரு வீடுகளானது ஜுலை மாதம் 01ஆம் திகதி முதல் ஜுலை %ஆம் திகதிவரையாக அமுல்படுத்தப்பட்டுள்ள சௌபாக்கியா வாரத்திற்கு அமைவாக இன்றைய தினம் திறந்து வைக்கப்பட்டு கையளிக்கப்பட்டது.

ஆலையடிவேம்பு பிரதேச செயலாளர் வி.பபாகரனின் அறிவறுத்தலுக்கமைய சமுர்த்தி தலைமையக முகாமையாளர் என்.கிருபாகரன் தலைமையில் இன்று இடம்பெற்ற வீடு கையளிக்கும் நிகழ்வில் பிரதேச செயலக கணக்காளர் க.பிரகஸ்பதி கலந்து கொண்டு வீட்டினை திறந்து வைத்தார்.

இதன் பின்னர் 6 இலட்சம் பெறுமதியில் நிர்மாணிக்கப்படும் வீடொன்றிற்கான இரண்டாம் கட்ட காசோலையையும் வழங்கி வைத்தார்.

நிகழ்வில் சமுர்த்தி முகாமைத்துவ பணிப்பாளர் சிவப்பிரியா சுதாகரன் கருத்திட்ட முகாமையாளர் எஸ்.சுரேஸ்காந் ஆலையடிவேம்பு தெற்கு வலய முகாமையாளர் கே.அசோக்குமார் சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் க.ஜெயந்தி வி.சந்திரகுமார் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

## திருகோணமலை தாதி உத்தியோகத்தர் ஒருவர்
# தனக்குத் தானே தீ மூட்டி தற்கொலை செய்ய முயற்சி

இச்சம்பவம் நேற்று மாலை இடம்பெற்றுள்ளது.

ஈச்சிலம்பற்று கொரோனா இடைத்தங்கல் முகாமில் கடமையாற்றி வந்த சேருநுவர ஆர்,பி 3 பகுதியைச் சேர்ந்த ஜீ.ஏ.சீ.மனோகரி (37வயது) என தெரிவிக்கப்படுகின்றது.

கணவர் பொலிஸ் உத்தியோகத்தராக கடமையாற்றி வருகின்ற நிலையில் தீ மூட்டிக் கொண்ட தாதிய உத்தியோகத்தர் தற்பொழுது ஈச்சிலம்பற்று கொரோனா இடைத்தங்கல் முகாமில் கடமையாற்றி வருவதாகவும் குடும்பத்தகராறு காரணமாகவே தனக்குத் தானே தீ மூட்டி கொண்டதாகவும் ஆரம்ப கட்ட விசாரணைகளின் மூலம் தெரியவந்துள்ளது.

குறித்த தாதிய உத்தியோகத்தர் சேருநுவர பிரதேச வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதையடுத்து மேலதிக சிகிச்சைக்காக திருகோணமலை பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் தெரியவருகின்றது.

தீ மூட்டியமைக்கான காரணம் தொடர்பில் தீவிர விசாரணைகளை மேற்கொண்டு வருவதாக சேருநுவர பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

# காரைதீவு தவிசாளர் ஜெயசிறிலின் சொற்பிரயோகங்கள் அவரது அரசியல் முதிர்ச்சியின்மையினை எடுத்துக்காட்டுகின்றது

## – தவிசாளர் நௌஷாட் காட்டம்!

[நூருல் ஹுதா உமர்]

ஒரு பிரதேச சபையின் தவிசாளர் வேறு, பிரதேச சபைக்குட்பட்ட பிரதேசத்திற்கு தன் இன மக்களின் அழைப்பின் பேரில் சென்று மக்களின் பிரச்சினைகளை கண்டறிவதில் எந்த பிணக்குமில்லை. அந்த பிரச்சினை தொடர்பாக இன்னொரு இன குழுவைப்பற்றி ஊடகங்களுக்கு அறிக்கைவிடுவது என்பது அரசியல் நாகரீகத்திற்கு முரணான செயற்பாடாகும் என சம்மாந்துறை பிரதேச சபை தவிசாளரும், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான ஏ.எம்.முஹம்மட் நௌஷாட் தெரிவித்தார்.

சம்மாந்துறை உதயபுரம் மைதான மயான வீதி அபிவிருத்தி விடயம் தொடர்பாக காரைதீவு பிரதேச சபை தவிசாளர் கிருஷ்ணபிள்ளை ஜெயசிறில் ஊடகங்களுக்கு அறிக்கை விடுத்தை சுட்டிகாட்டி இவ்வாறு தெரிவித்தார்.



சம்மாந்துறை உதயபுரம் மைதான மயான வீதி அபிவிருத்தி தொடர்பாக ஏற்பட்டுள்ள பிரச்சினைக்கு எந்த இன வேற்றுமையின்றி மக்களின் தேவைகளையும், உணர்வுகளையும் உள்வாங்கி சகல நடவடிக்கையும் முன்னெடுக்கும் இந்சந்தர்ப்பத்தில் காரைதீவு பிரதேச சபை தவிசாளர் கிருஷ்ணபிள்ளை ஜெயசிறில் இன்னொரு இனத்தைப் பார்த்து இனவாத குழுக்கள் போன்ற சொற்பிரயோகங்கள் என்பது அவரது அரசியல் முதிர்ச்சியின்மையினை எடுத்துக்காட்டுகின்றது.

அப்பகுதியில் வாழ் இளைஞர்களுக்கிடையில் ஏற்பட்டுள்ள கருத்து முரண்பாடுகள் ஆக்கபூர்வமாக தீர்த்துவைப்பது அந்தந்தப் பிரதேசத்திலுள்ள மக்கள் பிரதிநிகளின் கடமையாகும்

இதனைப் பொறுப்பு வாய்ந்த பல்லினம் வாழும் பிரதேச சபையின் தவிசாளர் மக்கள் மத்தியில் இப்படியான கருத்துக்களை வெளியிடுவது கவலையழிக்கின்றதும், தவிர்க்கப்பட வேண்டியதுமாகும். உதயபுரம் மைதான மயான வீதி எந்த இன வேற்றுமையின்றி மக்களின் தேவைகளையும் உணர்வுகளையும் உள்வாங்கி தீர்க்கப்படும் எனவும் குறிப்பிட்டார்.

# மருதமுனையில் தனிமைப்படுத்தப்பட்டுள்ள 1575 குடும்பங்களுக்கு நிவாரணம்



[பி.எம்.எம்.ஏ.காதர், ஏ.எல்.எம்.ஷினாஸ், ஜெஸ்மி எம்.மூஸா]

கல்முனை தெற்கு சுகாதார வைத்திய அதிகாரி பிரிவிற்குட்பட்ட மருதமுனை- 3 கிராமசேவையாளர் பிரிவு கடந்த 2ஆம் திகதி தொடக்கம் எதிர்வரும் இரண்டு வாரங்களுக்கு தனிமைப்படுத்தப்பட்ட பிரதேசமாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதனையடுத்து குறித்த கிராமசேவையாளர் பிரிவில் வசிக்கும் பொதுமக்களுக்கு பல்வேறு சமூக அமைப்புகள் முன்வந்து நிவாரணங்களை வழங்கிக் கொண்டிருக்கின்றனர். நேற்று (06) மருதமுனை ஜம்இய்யதுல் உலமா சபை மற்றும் அனைத்து பள்ளிவாசல்கள் சம்மேளனம் ஒன்றிணைந்து தனிமைப்படுத்தப்பட்ட பிரதேசத்தில் வசிக்கின்ற 1575 குடும்பங்களுக்கும் முதல்கட்ட நிவாரணத்தை வழங்கி இந்தப் பணியை ஆரம்பித்து வைத்தனர்.

இந்த முதல்கட்ட நிவாரணத்தின் போது அத்தியாவசியமாக மக்களுக்கு தேவையான அரிசி வழங்கப்பட்டது. கல்முனை தெற்கு சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் ஏ. ஆர்.எம்.அஸ்மி, கல்முனை பிரதேச செயலாளர் ஜே. லியாக்கத் அலி, ஜம்இய்யத்துல் உலமா சபை, அனைத்து பள்ளிவாசல் சம்மேளனத்தின் பிரதிநிதிகள், ஊழஎனை - 19 தடுப்பு செயலணியின் உறுப்பினர்கள் ஆகியோர் ஒன்றிணைந்து பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்காக நிவாரணங்களை வழங்கும் பணிகளில் ஈடுபட்டனர்.

இதன் போது இங்கு கருத்து வெளியிட்ட சம்மேளனத்தின் பிரதிநிதிகள் எதிர்காலத்தில் மக்களுக்குத் தேவையான நிவாரணப் பணிகளை தொடர்ந்தும் நாம் முன்னெடுக்க தயாராக உள்ளோம். தற்போது வழங்கப்படுகின்ற இந்த நிவாரணப் பணியானது எமது முதல் கட்ட ஆரம்ப பணியாகும் என்று தெரிவித்தனர்.

நிகழ்வின்போது ஜம்இய்யா மற்றும் சம்மேளனத்தின் சார்பில் கலாநிதி அஷ்செய்க் எம். எல். முபாறக் (மதனி), அஷ் செய்க் எம்.ஐ.எம் குசைனுத்தீன் (றியாழி), ஜனாப் ஏ.ஏ.புழைல், எம்.எல். எம்.ஜமால்தீன் உள்ளிட்ட முக்கியஸ்தர்கள் கலந்து கொண்டனர்.

# கல்முனையில் சேதன பசளை உற்பத்தி தொடர்பில் செயலமர்வு



நாட்டைக் கட்டியெழுப்பும் சுபிட்சத்தின் நோக்கு ஜனாதிபதியின் தேசிய வேலைத்திட்டத்தின்கீழ் நஞ்சற்ற உணவு உற்பத்தியை மேம்படுத்தும் இயற்கை முறையிலான சேதனப் பசளை உற்பத்தியினைஊக்குவிக்கும் திட்டங்கள் நாடளாவிய ரீதியில் முன்னெடுக்கின்றது.

இதற்கமைய சேதனப் பசளை உற்பத்தி முறைகள் பற்றிய செயலமர்வு கல்முனை பிரதேசத்தில் நேற்று (06) இடம்பெற்றது.

கல்முனை பிரதேச செயலகத்தின் இஸ்லாமாபாத் கிராம சேவகர் பிரிவில் உள்ள சமூர்த்தி பெறும் குடும்பங்களை ஊக்குவிக்கும் முகமாககல்முனை பிரதேச செயலக சமூர்த்தி பிரிவினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இவ் செயலமர்வு சமூர்த்தி உத்தியோகத்தர் ஐ. எல். அர்ஸதீன் தலைமையில் இடம்பெற்றது.

குறித்த செயலமர்வில் பிரதான வளவாலராக கல்முனை விவசாய விரிவாக்கல் நிலையத்தின் போதனாசிரியர் என் . யோகலக்ஷ்மி அவர்கள் கலந்து கொண்டுவீட்டு தோட்டத்தில் சேதன பசளை உற்பத்தி மற்றும் அதன் பயன்கள் தொடர்பில் விரிவாக விளக்கமளித்தார்.

மேலும் இதன் போது சேதன பசளை தொடர்பில்,

கலந்து கொண்டவர்கள் தங்கள் எதிர்நோக்கும் பிரச்சினை தொடர்பில் கேட்டறிந்து கொண்டு பயன்பெற்றனர் அத்துடன் தாம் சேதன பசளை உற்பத்தி செய்ய ஆர்வத்துடன் உள்ளதாக கலந்து கொண்ட பயனாளர்கள் கருத்து தெரிவித்தனர்.

இதன் போது கல்முனை பிரதேச செயலக சமூர்த்தி தலைமை பீட முகாமையாளர் ஏ. ஆர். எம். சாலிஹ் ,சிரேஸ்ட கருத்திட்ட முகாமையாளர் எம். எஸ். நயிமா, சமுர்த்தி வலய உதவி முகாமையாளர் எஸ். எல். அசீஸ் , பிரதேச கருத்திட்ட உதவியாளர் ஏ. எஸ். எம். ஜவ்பர், சமூர்த்தி பயனாளிகள் ஆகியோர் கலந்தகொண்டனர்.

# வெலிமடை வைத்தியசாலைக்கு வைத்திய உபகரணங்கள்!



[சில்மியா யூசுப்]

வெலிமடை வைத்தியசாலைக்கு சுமார் ரூபா 20 இலட்சம் பெருமதியான வைத்திய உபகரணங்கள் அண்மையில் Life of giving foundation FUjyht அமைப்பினால் வழங்கி வைப்பட்டது.

குருத்தலாவ முஸ்லிம் சமூகம் தங்களது சக்திக்கு அப்பாற்பட்டு சுமார் ஒரு மாதத்திற்கு உட்பட்ட காலப்பகுதியில் இவ் 20 இலட்சத்தை சேகரித்து மிகவும் சிறப்பான முறையில் இப்பணியை முதல் முறையாக நிறைவேற்றியுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்க விடயமாகும்.

அந்த வகையில் மிகவும் பாரிய கஷ்டத்திற்கும் மத்தியில் இப்பணிக்கு உதவி புரிந்த அனைவருக்கும் இவ் அமைப்பினால் நன்றியினை தெரிவித்துக் கொள்கின்றனர்.

# ஆலையடிவேம்பில் மக்கள் காலடிக்கு நிவாரணப் பணிகள்!

[வி.சுகிர்தகுமார்]

புலம்பெயர் உறவுகள் மற்றும் உள்ளூர் உறவுகள் அரச உத்தியோகத்தர்கள் மூலம் நிவாரணப்பணிக்காக திரட்டப்பட்ட 9 இலட்சத்திற்கும் அதிகமான நிதியில் கொள்வனவு செய்யப்பட்ட 567 உலர் உணவுப் பொதிகள் ஆலையடிவேம்பு பிரதேச சமூக நலன் அமைப்பினரின் உதவியுடன் பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் பங்களிப்புடன் மக்கள் காலடிக்கு கொண்டு சென்று வழங்கும் பணிகள் ஆலையடிவேம்பில் இடம்பெற்றது.



கொவிட் 19 மூன்றாம் அலை காரணத்தினால் ஆலையடிவேம்பு பிரதேசத்தில் பாதிக்கப்பட்ட வாழ்வாதாரத்தை இழந்த குடும்பங்களுக்கே குறித்த உலர் உணவுப்பொதிகள் வழங்கி வைக்கப்பட்டன.

ஆலையடிவேம்பு பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள மிகவும் பின்தங்கிய புளிம்பத்தை மகாசக்தி கிராமம் மற்றும் கண்ணகிகிராமம் கவடாப்பிட்டி பனங்காடு நாவற்காடு சின்னமுகத்துவாரம் உள்ளிட்ட 22 கிராமங்களை சேர்ந்த தெரிவு செய்யப்பட்டவர்களுக்கே உலர் உணவுப்பொதிகள் வழங்கப்பட்டன.

பெற்றுக்கொள்ளப்பட்ட 1600 ரூபா பெறுமதியான 567 பொதிகளில் இதுவரை பிரதேச செயலகத்தில் கையளிக்கப்பட்ட நிலையில் பொதிகள் பிரதேச செயலாளரின் அறிவுறுத்தலுக்கு அமைய கிராமங்கள் ரீதியாக பாதிக்கப்பட்டவர்களுக்கு முன்னுரிமை அடிப்படையில் வழங்கப்பட்டன.

# கொரோனாவால் உயிரிழந்த சமுகசேவையாளர் லயன் தங்கவேலிற்கு ஆத்மார்த்த பிரார்த்தனை

[வி.ரி.சகாதேவராஜா]

கொரோனாவால் உயிரிழந்த காரைதீவைச்சேர்ந்த பிரபல சமுகசேவையாளர், தேசமான்ய விபுலநேசன் லயன் சின்னதம்பி தங்கவேல் (வயது 75) அவர்களுக்கு ஆத்மார்த்த பிரார்த்தனையும் ,இறுதி அஞ்சலி நிகழ்வும் காரைதீவில் நடைபெற்றது.

காரைதீவு விபுலாநந்த ஞாபகார்த்த பணிமன்றத்தின் ஏற்பாட்டில் நேற்றுமுன்தினம்(5) மாலை இந்நிகழ்வு, சுகாதாரமுறைப்படி நடைபெற்றது. அன்னார் நேற்றுமுன்தினம் காலை 5.30மணியளவில் இறைபதமடைந்து, அன்றுமாலை 4.30மணியளவில் அம்பாறையில் தகனம்செய்யப்பட்டமை குறிப்பிடத்தகக்து.



மன்றத்தின் உபதலைவர் சோ.ஸூரநுதன் தலைமையில், பணிமன்றத்தின் முன்னாள் தலைவர் வி.ரி.சகாதேவராஜாவின் நெறிப்படுத்தலில் இந்நிகழ்வு மன்றச்செயலாளர் கு.ஜெயராஜியின் ஒழுங்கமைப்பில் நடைபெற்றது.

நிகழ்வில் தவிசாளர், ஆலயத்தலைவர்கள், பணிமன்றத்தினர் என மட்டுப்படுத்தப்பட்டளவில் சில பிரமுகர்கள் கலந்துகொண்டனர்.